Praise the Lord: **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**let us pray. ..**

கொலோசெயர் / Colossians 1:19-20 (**பக்கம்: 275**)

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

For God was pleased to have all his fullness dwell in him, and through him to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross. (NIV)

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் For it has pleased [the Father] that all the divine fullness (the sum total of the divine perfection, powers, and attributes) should dwell in Him permanently. (AMP)

**Web ref:** **reconcile:** **1.** To reestablish a close relationship between. **2.** To settle or resolve. **3.** To bring (oneself) to accept. **4.** To make compatible or consistent.

**கிறிஸ்துவில் சகல பரிபூரணம், கிறிஸ்துவின் மூலமாய் தேவன் நம்மை ஒப்புரவாக்கிக் கொள்ள பிரியம்.**

இந்த வார்த்தைகளை நீங்கள் உங்கள் இருதயத்திலே ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள்.

*(எனக்கும் அவருக்கும் உள்ள பிரிவை தகர்த்து, என்னை அவர் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ள பிரியமாயிருக்கிறார்)*

*இந்த பிரியத்தை நானும்-அவரும், நீங்கள் . . .. . அவரவர்களும்-தேவனும் என்று சிந்தித்துப் பாருங்கள்.*

நான் எனது மனைவிடம் வைத்திருக்கிற பிரியம், என் மனைவி என்னிடம் வைத்திருக்கிற பிரியம் வேறு எதற்கும் ஒப்பிடமுடியாது. (ஒப்பிடவும் கூடாது.)

அதேபோல் தேவன் என்னிடம் வைத்திருக்கும் பிரியம், நான் தேவனிடம் வைத்திருக்கும் பிரியம் வேறு எதற்கும் ஒப்பிடமுடியாது. *(மற்றவர்களோடு ஒப்பிடமுடியாத ஒரு தனிப்பட்ட விசேஷமான பிரியம்)*

It is unique. **அபூர்வமான, விந்தையான, தனிப்பட்ட, இணையற்ற, ஒப்பற்ற. . .. . ஒன்று.**

இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட முறையிலே தேவனிடம் உள்ள உறவு சரியாக அமைந்திருக்குமானால்..

இந்த உலகத்தின் சூழ்நிலைகள், பாடுகள், ஏக்கங்கள், துன்பங்கள் எதுவானாலும்,

மேலும் இந்த உலகத்தின் ஆசைகள், சந்தோஷங்கள், பெருமைகள், வசதிகள் எதுவானாலும் நாம் தேவனோடு வைத்திருக்கும் ஒப்புரவு ஒருநாளும் குறைவுபடாது. மாறாக அது மேலும் மேலும் பூரணப்படும். ஆமென்.

(இப்படிப்பட்ட உறவைத்தான் தேடி அந்த காலத்திலே இந்தியாவிலே பலர் காடுகளிலும், மலைகளிலும் வாஞ்சையோடு தேடினார்கள் என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. அவர்கள் அப்படி தேவனைத் தேடுவதிலேயே சமாதானம் அடைந்தார்கள் என்று சொன்னால். . . .அந்த தேவனே நமது இருதயத்திலே வாழும் போது எவ்வளவு சமாதானம் நமக்கு இருக்கவேண்டும் . சிந்தித்துப் பாருங்கள். ஆமென். )

***வேதம் சொல்கிறது:***

மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். (1 யோவான் 2:16)

**இந்த உலகத்தின் சமாதானத்தையும் வாழ்க்கையையும் நீங்கள் நன்கு ஆழ்ந்து சிந்திக்க சிந்திக்க, இது ஒரு நிலையில்லாதது (மாயை) என்பதையும் நமது மனதுக்கு சஞ்சலமாகவும் இருப்பதை உணரலாம். *இதை உணராதவரையில் . . . .***

**மக்கள் உலகத்தைப் பிடித்தாலும், உலகம் மக்களைப் பிடித்தாலும். . .**

**மக்களின் மனதை, தேவனுடைய பிரியத்தை அறியாத/ஏற்றுக்கொள்ளாத வகையிலே பலவித சிந்தனைகளும், நம்பிக்கைகளும் ஆட்கொள்ளுகிறது. அவைகளிலே அவர்கள் ஆட்கொள்ளப்பட்டு அதிலே வருகிற உலக சமாதானத்திலேயே வாழ்கிறார்கள்.**

***கடந்த வருட கடைசி வேதப்படிப்பிலே. . . ..ஒரு வசனம் தியானித்தோம்:***

மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது.. . ..

அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.. . (ரோமர் 8:19,21)

**எல்லோரும் ஏதோ ஒரு நம்பிக்கையிலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். ..**

**ஏதோ ஒரு விதத்திலே மக்கள் மாயைக்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ..**

கிறிஸ்துவின் சாமாதனத்தில் வாழுகிற நாம். . . . .  ..
ஏதோ ஒரு நம்பிக்கை அல்ல. . .. ஒரே நம்பிக்கையிலே காத்திருக்கிறோம். ..
மாயைக்கு கீழ்ப்படுத்தியவர் தேவனே என்றாலும் அதிலிருந்து விடுவிக்க வல்லவரும் அவரே என்பதை உணர்ந்திருக்கிறோம். இந்த நம்பிக்கையிலே நாம் சந்தோஷமாக இருக்கவேண்டும்.
நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம். (ரோ. 8:25)
ஒரே நம்பிக்கையிலே பொறுமையோடு காத்திருக்கிறவர்களாக நாம் இருப்போமானால்,
உலகத்தின் உபத்திரவத்திலே பொறுமையாக இருக்கவும், ஜெபத்திலே உறுதியாக தரித்திருக்கவும் தேவனுடைய பிள்ளைகளான நமக்கு முடியவேண்டும்.

> உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான் 2:17)

இந்த வேதத்தின் ஒவ்வொரு வார்த்தைகளின் மூலம் நாம் நன்கு ஆழ்ந்து சிந்திக்க சிந்திக்க, கிறிஸ்துவின் சமாதானம், உலகம் கொடுக்க முடியாத, உலகம் கொடுக்கிறபிரகாரம் கொடுக்காத ஒன்று. அது பூரணமானது. மனதுக்கு சஞ்சலம் ஏற்படாது. மாறாக நிரந்தர ஆனந்தமும் அமைதியும் உண்டாக்கும். தேவனுக்கும் நமக்குமுள்ள ஒப்புரவு மேலும் மேலும் பூரணப்படும். . . . பரிசுத்தபடும். நம்முடைய மனம் அடையும் மகிழ்ச்சியை வார்த்தைகளாலே விவரிக்கமுடியாது. ஆமென்.
பிறகு ஏன் நமக்கு மன சஞ்சலமும், இன்னும் இந்த உலக காரியங்கள் மனதுக்கு சோர்வும் உண்டாக்குகிறது?

> இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்றல்ல, நமது இரட்சிப்பு நிறைவேற அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படவேண்டும் என்று வேதம் சொல்கிறது.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; (பிலி. 2:5) என்று வேதம் சொல்கிறது
Let this mind be in you, which was also in Christ Jesus: (KJV)  …attitude…  (NIV)
கிறிஸ்துவின் சிந்தை நம்மிலே நிலைத்திருந்தால். . . ..

> சஞ்சலமும் சோர்வும் எப்படி வரும்?
> உலகமாம்சத்தின் இச்சைகள் எப்படி நம்மை ஆட்கொள்ளும்?  சிந்தியுங்கள்

*இந்த வருட முதல் வேதப்படிப்பிலே. . .(கடந்த வாரம்)*

> மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபே. 4:24) என்ற வசனத்தை வாசித்தோம்.

இந்த வார்த்தை நம்மோடு ஜீவிக்கும் என்று சொன்னால், . . .. .
நாம் இந்த வேதத்தை மேலும் மேலும். வாசிக்க வாசிக்க. . ..
ஆண்டவரே,  உம்முடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனிதனான நான் அந்த சாயலோடு தொடர்ந்து வாழ நான் வாஞ்சையாக இருந்தும், என்னுடைய சுய சிந்தையிலும் சுயபலத்திலும் சுற்று சூழ்நிலையிலும் . . எவ்வளவோ தடைகள் உள்ளதே, பெலவீனங்கள் உள்ளதே. . .இதிலிருந்து எப்படி விடுதலையாகிறது என்ற ஏக்கம் பெருகும். உள்ளத்தை நெருக்கும். என்ன வழி?. . . .

> ஒரே வழிதான். சிருஷ்டித்தவர் சகலபரிபூரணமும் வாசமாயுள்ள பரிசுத்தர்.
> அவருடைய  சத்தியத்திலே நடந்து அவருடைய கிருபையை மேலும் மேலும் வேண்டும்போது, தேவன் நம்மீதுள்ள பிரியத்தினாலே விடுதலை செய்ய வல்லவராக இருக்கிறார். ஆமென்.

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்ற சொல்வதுபோல . .
கொஞ்சம் இந்த வார்த்தைகளை படித்த போதே, இவ்வளவு ஏக்கமும் உணர்வும் இருக்குமானால் . . ..
இதை மேலும் மேலும் படிக்க எப்படி இருக்கும்? சிந்தித்துப் பாருங்கள்.
தேவன் என்னிடமும் உங்களிடமும் வைத்திருக்கும், இணையற்ற, ஒப்பற்ற அந்த பிரியத்தினாலே, தேவ சமாதானத்தைப் பெற்ற நாம்,
நமது மக்களுக்கும் கிடைக்க இப்பொழுது நாம் அனைவரும் எழுந்து நின்று மன்றாடுவோம்.
கேட்கிற எவனும் பெற்றுக்கொள்வான் என்றபடி ஆகக்கடவது. ஆமென்.

<u>Let us Pray</u>

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1 தீமோத்தேயு 2:4-5)

தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர். என் தேவனே தாமதியாதேயும். (சங். 39:17)